பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 18 | ஞாயிற்றுக்கிழமை | 05.11.2023 கதிர் 358

# மொட்டுக் கட்சியின் கதை முடிந்தது ராஜபக்ஷக்கள் இனி வெல்ல முடியாது

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி ஆணித்தரம்

ராஜபக்ஷக்களின் மொட்டுக்கட்சி தற்போது முடிவுக்கு வந்துவிட்டது. இனி அந்தக்கட்சியாலும், ராஜபக்ஷக்களினாலும் வெற்றிபெறமுடியாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும்,முன்னாள்ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் துக்கானதேர்தல்நடைபெறுவதுஉறுதி. தற்போது மக்கள் மூன்று வேளை சாப்பிடுவதற்கேகடினப்படுகின்றார்கள். அவ்வாறான நிலையில் அவர்களால் எவ்வாறு சதாரண வாழ்க்கையை வாழ முடியும்.

இந்தஆட்சிவிரும்பியவாறுவரிகளை அதிகரிக்கின்றது. மின்கட்டணம், தொலைபேசிக் கட்டணம், ☞2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா இந்த வாரம் பெருந் தலைவர் இரா.சம்பந்தனை நேரில் சந்தித்துப் பேசுவார், குறிப்பாக சம்பந்தர் பதவி விலக வேண்டிய நியாயம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தொலைக்காட்சிப் பேட்டியில் தெரிவித்த கருத்துக் குறித்தும் கலந்தாலோசிப்பார் என்று கடந்த வாரமே தெரிவித்திருந்தேன்.

வெள்ளிக்கிழமை மாவை சேனாதிராசாவும் கட்சியின் பொருளாளர் கனகசபாபதியும் சம்பந்தரின் இல்லத்திற்குச் சென்று அவரைச் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பின் போது, சுமந்திரனின் கருத்துக் குறித்து மாவையர் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தார். சம்பந்தர் பொறுமையாக அதனைச் செவிமடுத்தார். எனினும் பதில் எதுவும் சொல்லவில்லை.

டிசெம்பரில் நடக்கவுள்ள கட்சியின் தேசிய மாநாடு தொடர்பில் சம்பந்தர் அக்கறையோடு பேசினார். அங்கு எடுக்கப்படவேண்டிய தீர்மானங்கள் தொடர்பில் தனது ஆலோசனைகள், உள்ளீடுகள், அவதானிப்புக்களைத் தான் முழுமையாகத் தருவார் என்றும் உறுதியளித்தார்.

சுமார் அரை மணி நேரத்திற்கும் அதிகமாக அவர்களது பேச்சு இடம்பெற்றது. சுமந்திரனின் கருத்துக்களை வைத்து ☞2

## உணவு விலைகள் அதிகரிக்கின்றன

ஒரு சில உணவு வகைகளின் விலைகளை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக, அகில இலங்கை உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள்உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அகில இலங்கை உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷண ருக்ஷான் நேற்றைதினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில்மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேநீர் கோப்பை ஒன்றின் விலை 5 ரூபாவினாலும், பால் தேநீர் ☞2

## பலஸ்தீனம் மீதான தாக்குதல்களை கண்டித்து வவுனியாவில் போராட்டம்




பலஸ்தீன மக்கள் மீது காஸாவில் நடத்தப்படும்தாக்குதலை உடன் நிறுத்துமாறு வலியுறுத்தி வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டம்நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக நடந்த இந்தப் போராட்டத்தை ☞8

## லிட்ரோ காஸ் விலை 95 ரூபாய் அதிகரிப்பு

லிட்ரோசமையல்எரிவாயுவிலை நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 95 ரூபாவினால்அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோநிறுவனம்தெரிவித்துள்ளது.

12.5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் புதிய விலை ☞8

## நாணய நிதிய உடன்பாட்டின்படியே அடுத்தாண்டு வரவு - செலவு திட்டம்

### பொருளாதார மீட்சிக்கு அவசியம் என்கிறார் வஜிர

அடுத்தவரவுசெலவுத் திட்டமும் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாடுகளுக்கு அமையவே தயாரிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதாரத்தினை மீட்டுஎடுப்பதற்காகவே சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடுகள் ☞2

## ஆலோசனைகளை நிறைவேற்றத் தவறும் உயரதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

நாட்டின் அபிவிருத்திக்காக வழங்கப்படும் ஆலோசனைகளை உரிய வகையில் நடைமுறைப்படுத்தத் தவறும்அரசநிறுவனபிரதானிகளுக்குஎதிராகஎதிர்வரும் நாட்களில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் மாவட்டத்தின் அபிவிருத்திக்காகமேற்கொள்ளப்படும்தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பணிகளை, அரசாங்க அதிகாரிகள்துரிதப்படுத்த வேண்டியது அவசியமெனவும், நாட்டை பின்னோக்கி கொண்டுச் செல்லும் வேலைத்திட்டத்திற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நுவரெலியாமாவட்ட செயலகத்தில் ☞2

## தொடருந்து சேவையில் மாற்றங்களை ஆராய ஜனாதிபதியால் குழு நியமனம்

நாட்டின்தொடருந்து சேவையில்மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள்தொடர்பில்ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகபோக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதுகுறித்துஅமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்ததாவது:

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவில் தொடருந்துத் திணைக்களத்தின் முன்னாள் பொது முகாமையாளர்கள் இருவர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

தொடருந்து சேவை ஒரு திணைக்கள ☞2

## மின் பட்டியலில் தொங்கினால் சுவர்க்கத்தை சென்றடையலாம்

### இத்தேகந்த தேரர் கடும் விமர்சனம்

தற்போதையநிலைமைகளின் பிரகாரம் பார்க்கையில்இன்னும் சில காலம் செல்கின்ற போது சுவர்க்கத்திற்கு செல்வதற்கு தானங்களைவழங்கத்தேவையில்லை. அமைச்சர் காஞ்சனவின் மின்சாரப் பட்டியலில் தொங்கியபடியேசுவர்க்கத்தை அடையலாம். அந்தளவிற்கு மின்சாரப் பட்டியலில் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று இத்தேகந்தேசத்ததிஸ்ஸதேரர் தெரிவித்தார். ☞2

### ஐ.நாவின் தூய்மை குறித்து ரணில் கேள்வி

## செம்டெம்பர் கூட்டத் தொடரை உதாசீனப்படுத்த முஸ்தீபு

காஸா பகுதியின் மோதல்நிலைமைகளை ஒரு கோணத்திலும், ஐக்கிய நாடுகள் சபைக்குள்இலங்கையைவேறு கோணத்திலும் பார்ப்பதில் நியாயமில்லை என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அடுத்த செப்டெம்பர் மாத மனித உரிமைகள்பேரவைக்கூட்டத்தொடருக்கு ஐ.நா. தூய்மையான கரங்களுடன் வந்தால் மட்டுமே இலங்கை பதிலளிக்கும் என்றும்தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இல்லையெனில் இலங்கை அதற்கு பதிலளிக்க வேண்டுமா? என்றும் ஜனாதிபதி கேள்வி எழுப்பினார். வெலிமடை புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை வெள்ளியன்று திறந்துவைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் ☞2

## ரணிலின் சரியான தலைமைத்துவத்தால் நாடு சுமூக நிலைக்குத் திரும்பியுள்ளதாம்

நாட்டின் 75 வருட கால ஆட்சியையும் கடந்த 15 மாதங்களாக நடக்கும் ஆட்சியையும் ஒருபோதும் ஒப்பிட முடியாது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சரியான அரசியல் தலைமைத்துவத்தினால்நாடு இன்று சுமூகமான நிலைமைக்கு திரும்பியுள்ளது என்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும்அரசியலமைப்பு மறுசீரமைப்புஅமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

வெலிமடை புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை புதனன்று திறந்துவைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கமேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் கடினமான நிலைமைகளுக்கு மத்தியில் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சம்பந்தரிடம் அனுதாபங்களைத் தேடி, இன்னும் சிறிது காலம் கட்சித்தலைமையில் அமர்ந்திருக்க மாவையர் திட்டமிட்டிருந்தால், அந்தப் பருப்பு சம்பந்தரிடம் வேகவில்லை என்றே தெரிகிறது.

தான் பதவிவிலகுவதற்கு முன்னதாக கட்சியை மாவையரிடமிருந்து மற்றொரு தலைவருக்குக் கைமாற்றிவிட்டுத்தான் சம்பந்தர் ஓய்வார் போலுள்ளது. டிசெம்பரில் கட்சியின் தேசிய மாநாட்டைக் கூட்டுவதிலும் ஏகமனதாக அங்கு மாற்றங்களைச் செய்வதிலுமே அவரது பேச்சின் கவனம் இருந்துள்ளது.

சுமந்திரனின் கருத்துத் தொடர்பில் அவர் அதிகம் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. கடந்த வாரம் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழுவினரை சம்பந்தன் சந்தித்தபோதும்கூட சுமந்திரன் உடனடிருந்தார். அந்தச் சந்திப்புக்கு அரை மணி நேரம் முன்னதாகவே சுமந்திரன் அவர் அங்கு வந்திருந்தார். சம்பந்தர் அப்போதே சந்திப்புக்குத் தயாராக அமர்ந்திருந்தார். இருவரும் சந்திப்பில் பேச வேண்டிய விடயங்கள் குறித்துப் பேசினர். ஆட்சியாளர்களுடனான ஊடாட்டங்கள் குறித்து சுமந்திரனிடம் இருந்து தகவல்களை அறிந்து கொள்வதிலேயே சம்பந்தர் அக்கறை காட்டினார்.

சுமந்திரனின் கருத்துக்கள் குறித்து அவரும் எதுவும் கேட்கவில்லை. சுமந்திரனும் தானாக அதைப் பற்றி எதுவும் பேசவில்லை. ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுடனான சந்திப்பு முடிந்ததும் சுமந்திரன் அங்கிருந்து கிளம்பிவிட்டார்.

சுமந்திரனின் கருத்துக்கள் குறித்து சம்பந்தன் பெரியதாக அலட்டிக்கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை என்றாலும் அவருடன் இருக்கும் அவரது மகன் அது குறித்து கடும் அதிருப்தியும் கோபமும் அடைந்திருக்கிறார் என்று அறியமுடிந்தது. கடந்த வாரத்தில் பல நாட்கள் அவர் திருகோமலையில் நின்றார். அங்கு கட்சியில் சம்பந்தரின் ஆதரவாளர்களைச் சந்தித்து சுமந்திரனின் கருத்துக்கள் குறித்துக் கலந்துரையாடி இருக்கின்றார். அப்போது, அந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கேட்கப்பட்ட கேள்விக்கு, சுமந்திரன் ஊழல் பற்றிய சட்ட வரைவிலக்கணத்தைத் கூறி சம்பந்தர் நாடாளுமன்ற உறுப்பினராகக் கொடுப்பனவுகளைப் பெறுவது ஊழல் வரையறைக்குள் வராது என்று வாதிட்டிருக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

ஆக மொத்தத்தில் எல்ல அரசியல் களங்களிலும் நடப்பதைப் போன்று சம்பந்தப்பட்டவர்கள் சும்மா இருந்தாலும் சுற்றியுள்ளவர்கள் இந்த விடயத்தை அவ்வளவு இலகுவில் விட்டுவிடமாட்டார்கள் போன்றே தெரிகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மொட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீர்க்கட்டணம் உள்ளிட்டவை மாதந்தோறும் அதிகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நான் 2015 முதல் 2019 வரையில் ஜனாதிபதியாக பதவி வகித்திருந்தேன். அந்தக் காலத்தில் கடந்த மூன்று வருடங்களில் ஏற்பட்ட பிரச்சினை மக்களுக்கு எற்பட்டிருக்கவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷ ருவான் வெலிசாயவுக்கு அண்மையில் பதவிப்பிரமானம் செய்கின்றபோது, தான் சிங்கள மக்களால்தான் வெற்றிபெற்றார் என்று அறிவித்தார். ஆனால் நான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறவதற்கு சிங்கள மக்களைப் போன்று தமிழ், முஸ்லிம் மக்களும் வாக்களித்தனர். அவர்களின் வாக்களிப்பு வீதம் 80சதவீதத்துக்கும் அதிகமாக இருந்தது.

ராஜபக்ஷக்களின் மொட்டுக்கட்சி தற்போது முடிவுக்கு வந்துவிட்டது. இனி அந்தக்கட்சியாலும், ராஜபக்ஷக்களினாலும் வெற்றிபெற முடியாது.

ஏனைய கட்சிகளுக்கும் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன என்றார்.

## உணவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோப்பை ஒன்றின் விலை 10ரூபாவினாலும் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சீனியின் விலை கிலோ ஒன்றுக்கு 80 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. பால்மா 400 கிராம் 1,080 ரூபாவாக உள்ளது. சோற்றுப் பொதி, கொத்து மற்றும் பிரைட் ரைஸ் ஆகியவற்றின் விலைகளை 20 ரூபாவினால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரிசி, கோழி இறைச்சி, மரக்கறிகள் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளதால் இம்முடிவை எடுக்கும் நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

அது மாத்திரமன்றி தற்போது மின்சாரம், நீர்க் கட்டணங்கள் உச்ச அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது. சமையல் எரிவாயு விலையேற்றமும் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், இவ்வாறு விலைகளை அதிகரிக்க நேரிட்டுள்ளது என்றார்.

## நாணய நிதிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எட்டப்பட்டன. அதற்கு அமைவாகவே பொருளாதார மீட்சிக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த வகையில் தற்போது, வரவு,செலவுத் திட்டமும் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாடுகளுக்கு அமைவாகவே தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்தவரவு,செலவுத்திட்டத்தினை எதிர்த்து போராடுகின்றார்கள். அதன் உள்ளடக்கம் பற்றிய தெளிவின்றியே போராட்டத்தினை முன்னெடுக்கின்றார்கள். அவ்வாறு போராட்டத்தினை முன்னெடுப்பவர்கள், வரவு,செலவுத்திட்ட முன்மொழிவு தொடர்பில் மாற்றுத் திட்டங்களை கொண்டிருப்பார்களாக இருந்தால் அவற்றை முன்மொழியுமாறு நாம் பகிரங்கமாக கோருகின்றோம். அதற்காக நாடாளுமன்றத்தில் வரவு,செலவுத் திட்ட அலுவலகம் காணப்படுகின்றனது.

அந்த அலுவலகத்தில் திட்டங்களை முன்மொழியுமிடத்து நாம் அதுபற்றிய ஆராய்வுகளைச் செய்வதற்குதயாராகவே உள்ளோம் என்றார்.

## ரணிலின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெலிமடை நீதிமன்றத் தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது. மண்சரிவு அபாயத்திற்கு மத்தியிலும் சட்டத்தை நடை முறைப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

2019 ஆம் ஆண்டு இந்த கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. தற்போதைய ஜனாதிபதி பிரதமராக இருந்த 2015 -2019 காலப்பகுதியில் இதுபோன்ற 85 நீதிமன்றக் கட்டடத்தொகுதிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அவற்றில் 45 கட்டடங்களை திறந்து வைக்க முடிந்தது. அதன் பின்னரான பொருளாதார நெருக்கடி காரணமாக இதுவரையில் 2 கட்டடங்கள் மாத்திரமே திறக்கப்பட்டுள்ளன. இறுதியாக இரத்தினபுரியிலும், இன்று வெலிமடையிலும் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதோடு, அடுத்த மாதமளவில் தெல்தெனிய நீதிமன்ற கட்டடத்தொகுதியின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு திறந்து வைக்கப்படும்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட துரதிஷ்டவசமான நிலைமையினால் நாட்டின் நிறைவேற்றுத் துறையும், அரசமைப்பினதும் இருப்பு கேள்விக்குரியானது. அந்த நிலை சட்டத்துறைக்கும் ஏற்பட்டிருந்தால் நிலைமை பாரதூரமாகியிருக்கும். ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொவிட் பரவல் என்பன ஆட்சியின் இருப்புக்கு சவால் விடுத்தமையால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டனர்.

சுதந்திரத்தின் பின்னரான 75 வருடங்களாக மக்கள் தெரிவு செய்த குழுவினரே நாட்டை ஆள்கின்றனர். சட்டத்துக்கு அமைவான தேர்தல்கள் வாயிலாக தெரிவு செய்யப்பட்ட குழுவினரால் நாட்டின் ஆட்சி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

எவ்வாறாயினும், அந்த 75 வருட ஆட்சியையும் கடந்த 15 மாதங்களுக்குள் நாட்டில் நடக்கும் ஆட்சியையும் ஒருபோதும் ஒப்பிட முடியாது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சரியான அரசியல் தலைமைத்துவத்தினால் நாடு இன்று சுமூகமான நிலைமைக்கு திரும்பியுள்ளது. அவர் நாட்டை பொறுப்பேற்றுக்கொண்ட போது 76 சதவீதமாக காணப்பட்ட உணவுத் தட்டுப்பாடு தற்போது பூச்சியமாக காணப்படுகின்றது என்றார்.

## செம்டெம்பர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனிதஉரிமைகள் தொடர்பிலான உலகளாவிய பிரகடனத்தை மேற்கோள் காட்டிய ஜனாதிபதி உலக நாடுகள் அனைத்தும் அதற்கு இணங்கிச் செயற்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலுக்கு இலங்கை அரசு கண்டனம் தெரிவித்திருந்தாகவும், பயங்கரவாதத்தை எதிர்க்கும் அதேநேரம், பாலஸ்தீன அரச இறைமை தொடர்பிலான நியதிகளுக்கான ஒத்துழைப்பையும் இலங்கை உறுதிப்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார். சர்வதேச சமூகத்தின் இந்த கண்டனமானது சர்வதேச சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளின் கட்டமைப்பிற்குள் பதிலடி கொடுக்கும் உரிமையை இஸ்ரேலுக்கு வழங்கியதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

எவ்வாறாயினும், அத்தகைய நியதிகள் உலகளாவிய ரீதியில் நடைமுறையில் இல்லாதிருக்கின்றமைக்கு கவலை தெரிவித்த ஜனாதிபதி, ஐ.நா.முகவர் நிறுவனங்களுக்கமைய காஸாவில் 10,000 க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டமை குறித்து சர்வதேசசமூகத்திடமிருந்து கிடைக்கும் பதில்கள் என்னவென்ற கேள்விக்குறியை தோற்றுவித்துள்ளது.

மனித உரிமைகள் தொடர்பில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இலங்கை மற்றும் காஸா பகுதி தொடர்பில் இந்த நாடுகள் கடைப்பிடிக்கும் அணுகுமுறையில் எதற்காக வேறுபாடு காட்டப்படுகிறது என்றும் கேள்வி எழுப்பினார். எவ்வாறாயினும் இருதரப்பினருக்கும் ஒரேமாதிரியான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

சர்வதேச சட்டத்தின்படி பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்காக எடுக்கப்படும் அடிப்படை சுதந்திரத்தைப் பாதுகாப்பதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திட்டங்களுக்கு அமைவானதாக காணப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவற்றை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படக்கூடிய முரண்பாடுகள் தொடர்பிலும் கேள்வி எழுப்பினார்.

அதேபோல் காஸா எல்லையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மனித உரிமைகள் மீதான பாதிப்பு தொடர்பில் கவலை தெரிவித்த ஜனாதிபதி, உணவுபாதுகாப்பின்மை, எரிபொருள் இன்மை, அத்தியாவசிய மருந்து பொருட்கள் இன்மை, உள்ளக வருமானம் குறைவடைதல் என்பன இலங்கை கடந்த வருடத்தில் முகம்கொடுத்த நெருக்கடியை விடவும் பாரதூரமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

மேற்குலக நாடுகள் இலங்கை மற்றும் காஸா எல்லை தொடர்பில் பின்பற்றும் நியதிகளின் வேறுபாடுகள் தொடர்பில் கேள்வி எழுப்பிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தூய்மையான கரங்களுடன் உலகளாவிய தேவைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

வெலிமடை மக்களின் நீதிமன்றச் செயற்பாடுகளை இலகுபடுத்தும் வகையில் மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம், அலுவலக வசதிகள் உட்பட பொது வசதிகளை உள்ளடக்கியதாக மேற்படி 03 மாடிக் கட்டடத்தொகுதி 460 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த நீதிமன்ற கட்டடத் தொகுதியை நிர்மாணித்துள்ளமையினால் குறைந்தபட்ச வசதிகளை கொண்டிருந்த வெலிமடை நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்ற நடவடிக்கைகளுடன் கூடியதாக மாறியுள்ளது.

சர்வமத வழிபாடுகளை தொடர்ந்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நினைவுப் படிகத்தை திரைநீக்கம் செய்து நீதிமன்ற கட்டத்தொகுதியை திறந்துவைத்தார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு வெலிமட சட்டத்தரணிகள் சங்கத்தினால் நினைவுச் சின்னமொன்று வழங்கி வரவேற்பளிக்கப்பட்டது.

## ஆலோசனைகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

மாவட்ட அரசியல் குழுவினர் மற்றும் அரச அதிகாரிகள் இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்ததோடு, மாவட்டத்தின் அபிவிருத்திக்காக தற்போது வரை முன்னெடுக்கப்பட்டிருக்கும் வேலைத்திட்டங்கள் மற்றும் எதிர்கால அபிவிருத்திக்கான திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அதேபோல் 2022 டிசம்பர் 22 மற்றும் 2023 ஏப்ரல் 10 ஆகிய திகதிகளில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கூட்டங்களில் எடுக்கப்பட்டத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முன்னேற்றம் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

மாவட்ட வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாட்டைக் குறைத்தல், பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், வீதி புனரமைப்பு, குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு உள்ளிட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட உடனடித் தீர்மானங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அதனையடுத்து வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகள், ஜனாதிபதியின் நேரடி கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு நிவர்த்தி செய்யப்பட்டன.

நுவரெலியாவை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கண்கவர் பகுதியாக மாற்றியமைக்கும் வேலைத் திட்டங்களைத் துரிதப்படுத்துவதன் மூலம், இது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பாக இருக்கும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாத்துறை முதலீடுகளை ஈர்க்க, அரசாங்க அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களுக்கமைய அவர்களின் பொறுப்புக்களை துரிதமாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அரச நிறுவன பிரதானிகள் தமது நிறுவனங்கள் தொடர்பில் சரியான தெரிவைக் கொண்டிருக்க வேண்டுமெனவும், அவ்வாறு இல்லாத பட்சத்தில் அரச நிறுவனங்களிடத்திலிருந்து மக்களுக்கான சேவை கிடைக்காதெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நுவரெலியா அபிவிருத்தித்திட்டம் தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டது. நுவரெலியா மாவட்ட செயலாளர் அலுவலக கட்டிடத்தின் கீழ் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஆடை விற்பனை நிலையமொன்றையும் ஜனாதிபதி திறந்துவைத்தார். அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, கஞ்சன விஜேசேகர, ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பீ.திசாநாயக்க, வீ.ராதாகிருஷ்ணன், மருதபாண்டி ரமேஷ்வரன், மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி. லலித் யூ கமகே ஆகியோருடன் அமைச்சுக்களின் செயலாளர்கள், நுவரெலிய மாவட்டச் செயலாளர் பீ.கே.நந்தன உள்ளிட்டவர்களும், அரசாங்க அதிகாரிகளும், பாதுகாப்பு பிரிவினரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

## மின் பட்டியலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெலும்மாவத்தையில் நேற்றையதினம், பொது ஜன பெரமுவின் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தினை முன்னிட்டு ஆசிவேண்டியும், எதிர்காலச் செயற்பாடுகளுக்கு முன்னதான சமய ஆராதனைகளையும் மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்ட நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரலாற்றில் என்றுமில்லாதவாறு மக்களின் பெருவாரியான ஆணை வழங்கப்பட்டது. அந்த ஆணையைப் பாதுகாக்க முடியாதாயின் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. மக்கள் ஆணையைப் பாதுகாப்பதற்கு தலைக்கணமற்ற தலைமைத்துவம் அவசியமாகும்.

தற்போதுள்ள ஆட்சிக்கு மக்கள் ஆதரவு வழங்குவதாயின், செயலாளர் ஒருவிடயத்தினை கவனத்தில் கொள்ள வேண்டும். மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள். அவர்களுக்கான நெருக்கடிகளை தவிர்ப்பதற்கு ஆளும் தரப் புக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

மக்களின் நெருக்கடிகளை உணராது செயற்படும் நிலைமைகள் தொடர்ந்தால் மீண்டும் வீதியில் இறங்க முடியாத நிலைமைகள் தோன்றும். கிராமங்களுக்குச் செல்ல முடியாத சூழல்கள் ஏற்படும்.

ஆகவே அவற்றை மற்றியமைக்க வேண்டிய தேவை பொது ஜன பெரமுனவிற்கு உள்ளது. தற்போதைய நிலைமைகளின் பிரகாரம் பார்க்கையில் இன்னும் சில காலம் செல்கின்றபோது சுவர்க்கத்திற்கு செல்வதற்கு தானங்களை வழங்கத்தேவையில்லை. அமைச்சர் காஞ்சனவின் மின்சாரப்பட்டியலில் தொங்கியபடியே சுவர்க்கத்தை அடையலாம். அந்தளவிற்கு மின்சாரப்பட்டியலில் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலைமைகளை மாற்றி அமைக்க வேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் பாவப்பட்ட ஏழை மக்கள் பெருவாரியாக புதிய தலைமைத்துவத்துக்காக வழங்கிய மக்கள் ஆணை தோல்வியுற்றதாகவே அமையும். அதனை எந்தவொரு செயற்பாடுகளாலும் ஈடுசெய்யவே முடியாது. ஆகவே ஆட்சியாளர்கள் முன்னெடுக்கும் முட்டாள்தனமான செயற்பாடுகளுக்கு எதிராக இறுக்கமான நிலைப்பாடுகளுடன் நிற்கவேண்டும். அவற்றுக்கு எதிராகத் தயக்கமின்றி பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

## காஸ் விலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3,565 ரூபாவாகும்.

அத்துடன், 05 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 38 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 1,431 ரூபாவாகும்.

2.3 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 18 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 2.3 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் புதிய விலையானது 650 ரூபாவில் இருந்து 668 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

## தொடருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகக் காணப்படுவதால், தீர்மானங்களை மேற்கொள்வதில் அதிக காலம் செலவிடப்படுகிறது.

அத்துடன், தொடருந்துத் திணைக்களம் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுவதைக் கருத்திற்கொண்டு, அதனை அதிகார சபையாக மாற்றுவது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்துள்ளோம்.

இதற்கமைய, ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர், அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் மக்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக கிண்ணியாவில் ஆர்ப்பாட்டம்





பாலஸ்தீன் மக்கள் மீதான இன அழிப்பு தாக்குதலை நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கும் மக்கள் எழுச்சிப் போராட்டம் வெள்ளிக்கிழமை பகல் 1.00 மணியளவில் கிண்ணியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது. கிண்ணியா சூரா அமைப்புடன் பல சமூக நிறுவனங்களும் இணைந்து ஏற்பாடு செய்த மேற்படி கண்டன எழுச்சி பேரணியில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர். இதன்போது பாலஸ்தீன் மக்கள் படுகின்ற இன்னல்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டதோடு அவர்களுக்காக பிரார்த்தனையும் செய்யப்பட்டு கண்டனக் குரல்களும் எழுப்பப்பட்டன. (05)

## மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து கடற்கரைக்கு வந்த காட்டு யானைகள்

### அச்சத்தில் மக்கள்



மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பகுதியிலிருந்து மட்டக்களப்பு வாவியில் நீந்தி எழுவாங்கரைப்பகுதிக்கு இரண்டு காட்டுயானைகள்வெள்ளிக்கிழமை அதிகாலை உட்புகுந்துள்ளதால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளார்.

வெள்ளிக்கிழமை அதிகாலை சுமார் 3 மணியளவில் இக்காட்டு யானைகள்மட்டக்களப்புவாவியை நீந்தி களுதாவளைக் கிராமத்திற்குள் உட்புகுந்துள்ளன.

இவ்வாறு கிராமத்திற் குள் உட்புகுந்த இரு காட்டு யானைகளும், தோட்டங்களையும் வீட்டு வேலிகளையும், துவம்சம் செய்துவிட்டு கடற்கரைப் பகுதியூடாகச் சென்று தேத்தாத்தீவு கடற்கரையில்அமையப்பெற்றுள்ள சவுக்கு பற்கை காட்டினுள் தங்கியுள்ளன.

பின்னர் பொதுமக்கள் ஒன்றிணைந்து காட்டு யானைகளை விரட்டுவதற்கு முயன்றபோது அதற்கு இடம்கொடுக்காத யானைகள் மாங்காடு கிராமத்தில் அமைந் துள்ள தோட்டங்களுக்குள் உட்புந்துள் ளன.

இந்நிலையில் அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்தின் மத்தியில் தமது தோட்டங்களுக்கு செல்வதிலும் நீர் பாய்ச்சுவதில் பெரும் அச்சத்தையும் சிரமங்களையும் எதிர் கொண்டிருந்தனர்.

தற்போது வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் இஸ்தத்திற்கு விரைந்து கடற்கரையில் அமைந்துள்ள சவுக்குமர பற்றைக் காட்டினுள் தரித்து நிற்கும் யானைகளுக்கு சத்தமிட்டு கோபம் ஏற்படுத்தாது அங்குகூடியிருந்தபொதுமக்களை அப்புறப்படுத்தியுள்ளனர்.

எனினும் காட்டு யானைகள் படுவாங்கரைப் பகுதியிலிருந்து எவ்வாறு கடற்கரையை அண்டியுள்ள எழுவாங்கரைப் பகுதிக்கு உட்பகுந்ததோ அதே பாதையூடாக மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அவற்றை வெளியேற்ற நடவடிக்கை எடுப்பதாக இதன்போது வருகை தந்த வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். (05)

## கிணற்றை மூடிவைக்கக் கூடாதாம் இந்திய நிதியமைச்சர் ஆலோசனை



மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தியாவின் நிதியமைச்சர் வெள்ளிக்கிழமையாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டிருந்தார் அதனைத் தொடர்ந்து வெளியில் வந்தபோது அங்கு கூடியிருந்த மக்களுடன் கலந்துரையாடி புகைப்படங்கள் எடுத்துக்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து வாகனத்தை நோக்கி சென்றபோது ஆலய வளாகத்தில் இருக்கின்ற கிணறு மூடப்பட்டிருந்தது. இதனைக் கண்ணுற்ற இந்திய நிதியமைச்சர் ஏன் இந்தக் கிணறு மூடப்பட்டுள்ளது இதனை திறந்திருப்பதே சிறந்தது என ஆலோசனை வழங்கினார்.

இந்த சந்திப்பின்போது யாழ் மாநரக சபை ஆணையாளர் ஜெயசீலன், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந்தியத் துணைத்தூதுவர் ராஜேஸ்நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரம் மற்றும் இலங்கை வெளிவிவகார இராஜங்க அமைச்சர் தாரக பாலசூரிய ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# தமிழர்களின் அடுத்த தலைமுறை கல்வித் தளத்தில் தம்மைத்தாமே நிலைநிறுத்திக்கொள்தல் வேண்டும்

### சிறீதரன் எம்.பி கோரிக்கை









சொந்த நாட்டில், தனது இருப்பைத் தக்கவைப்பதற்காக, எல்லாவகையிலும் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள தமிழர்களின் அடுத்த தலைமுறை, கல்வித் தளத்திலும் அறிவுப் புலத்திலும் தம்மைத்தாமே நிலைநிறுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வாறு செய்யாவிடின் எமது இனம் இருப்பழிந்து போய்விடும் என்கிற உண்மையை பிள்ளைகளுக்கு உணர்த்துவதன் மூலம் ஆளுமைமிக்க அடுத்த தலைமுறையை உருவாக்க வேண்டிய சமூகக் கடமை பாடசாலைகளுக்கு உள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிளிநொச்சி - சிவநகர் அ.த.க. பாடசாலையில்நடைபெற்றதேசியமட்ட சாதனையாளர் மதிப்பளிப்பு மற்றும் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வில்முதன்மைவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்-

பௌதீக வளப் பற்றாக்குறைகள் மிகுந்த நிலையிலும், திறமைக்கு எதுவும் தடையல்ல என்பதை உறுதி செய்பவர்களாக, தமது பள்ளியின் பெயரையும் ஊரின் பெயரையும் உயர்த்துவதற்காய் உழைப்பவர்களாக உள்ள சிவநகர் அ.த.கபாடசாலையின் மாணவர்கள் ஏனையோருக்கு முன்னுதாரணமானவர்கள்.

எத்தனையோ இடர்களையும் தடைகளையும் தாண்டி, வசதி வாய்ப்புகள் நிறைந்த பல பாடசாலைகளால் நெருங்க முடியாதிருக்கும் தேசியமட்ட வெற்றியை, தொடர்ச்சியாக தேசியமட்ட கபடிப் போட்டியில் பெற்றுவரும் இப்பிள்ளைகளினது மனோதிடத்தையும், அதிபர், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர்களது அயராத உழைப்பையும் பாராட்டுகிறேன்.

பாடசாலையின் அதிபர் இளவேந்தி நிர்மலராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிளிநொச்சி தெற்கு கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் பாலசிங்கம் வாசுதேவன், உருத்திரபுரீசுவரர் சிவாலய பிரதமகுரு சிவஶ்ரீ அமிர்த ஶ்ரீஸ்கந்தராஜக் குருக்கள், ஏனைய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கிராம அலுவலர், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் உட்பட பெருமளவிலானோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஐ.நாவின் தூய்மையை கேள்விகேட்கும் அருகதை ஜனாதிபதிக்கு இருக்கிறதா?

காஸா பகுதியின் மோதல் நிலைமைகளை ஒரு கோணத்திலும், ஐக்கிய நாடுகள் சபைக்குள் இலங்கையை வேறு கோணத்திலும் பார்ப்பதில் நியாயமில்லை என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. இதனால் அடுத்த செப்டெம்பர் மாத மனித உரிமைகள்பேரவைக்கூட்டத்தொடருக்குஐ.நா. தூய்மையான கரங்களுடன் வந்தால் மட்டுமே இலங்கை பதிலளிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் தொடர்பிலான உலகளாவிய பிரகடனத்தை மேற்கோள் காட்டிய ஜனாதிபதி உலக நாடுகள் அனைத்தும் அதற்கு இணங்கிச் செயற்படவேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறார்.

மனித உரிமைகள் தொடர்பில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இலங்கை மற்றும் காஸா பகுதி தொடர்பில் இந்த நாடுகள் கடைப்பிடிக்கும் அணுகுமுறையில் எதற்காக வேறுபாடு காட்டப்படுகிறது என்றும் கேள்வி எழுப்பினார். எவ்வாறாயினும் இரு தரப்பினருக்கும் ஒரே மாதிரியான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

சர்வதேச சட்டத்தின்படி பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்காக எடுக்கப்படும் அடிப்படை சுதந்திரத்தைப் பாதுகாப்பதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திட்டங்களுக்கு அமைவானதாக காணப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவற்றை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படக்கூடிய முரண்பாடுகள் தொடர்பிலும் கேள்வி எழுப்பினார்.

அதேபோல் காஸா எல்லையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மனித உரிமைகள் மீதான பாதிப்பு தொடர்பில் கவலை தெரிவித்த ஜனாதிபதி, உணவு பாதுகாப்பின்மை, எரிபொருள் இன்மை, அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் இன்மை, உள்ளக வருமானம் குறைவடைதல் என்பன இலங்கை கடந்த வருடத்தில் முகம்கொடுத்த நெருக்கடியை விடவும் பாரதூரமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறெல்லாம் கருத்துரைக்கும் அருகதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கிறதா? முதலில் பலஸ்தீன மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும் இதே ரணில் விக்கிரமசிங்க தமிழர்கள் மீது போர் கட்டவிழ்த்து விடப்பட்டபோது என்ன செய்து கொண்டிருந்தார்? அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து போருக்கு ஆதரவளித்துக்கொண்டிருந்தார். வன்னியில் அரச படைகளால் மக்கள் கொத்துக் கொத்தாகக் கொன்று அழிக்கப்பட்டபோது அதற்குக் கண்டனம் தெரிவிக்காமல் அந்தப் போரை ஆதரித்துக்கொண்டிருந்தார்.

இன்று இஸ்ரேல் படைகளால் பலஸ்தீன மக்கள் –10 ஆயிரம் பேர் கொல்லப்பட்டமை குறித்து கேள்வி எழுப்பும் ரணில் விக்கிரமசிங்க, வன்னியில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்று ஐ.நா. கூறியிருக்கையில் அது பற்றி வாய்திறந்ததில்லை. அவர்களுக்காகப் பரிதாபப்பட்டதில்லை. அந்த மக்களுக்கு நீதி வழங்க எந்த நடவடிக்கையும் எடுத்ததில்லை.

அதற்கும் மேலாக, பன்னாட்டுச் சட்டங்களையும், மனித உரிமைகள் தொடர்பான ஐநா தீர்மானங்கள் மற்றும் பன்னாட்டுச் சமவாயங்களையும் மனித குலத்துக்கு எதிரான பன்னாட்டுச் சட்டங்களையும் ஏற்றுக் கையெழுத்திட்ட இலங்கை அரசு போரின்போது அவற்றை உதாசீனம் செய்து மனித உரிமை மீறல்களிலும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களிலும் ஈடுபட்டது குறித்து கலப்பு நீதிமன்ற விசாரணைக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஒப்புக்கொண்டுவிட்டு இன்று, அத்தகைய விசாரணைகள் எவற்றையும் நிராகரித்திருக்கிறார் ரணில். இந்தக் குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணைகள் நடத்தப்படும் என்று தெரிவித்து வந்தபோதும் போர் முடிந்து 14 வருடங்களாகிவிட்டபோதும் அதற்கான முதல் அடியைக்கூட எடுத்து வைத்ததில்லை.

இப்படி சர்வதேச் சட்டங்களையும் மனித உரிமைச் சட்டங்களையும் ஏற்றுக்கொண்டுவிட்டு அவற்றை மதித்து நடக்காத இலங்கை அரசுக்குத் தலைமை தாங்கும் ஒருவர், உள்நாட்டில் நடந்த போர்க் குற்றங்கள் குறித்து எந்தவித விசாரணைகளையும் நடத்தாத ஒருவர், அத்தகைய விசாரணைகளை நடத்துவதாக ஐநா மனித உரிமைகள் பேரவையில் உறுதியளித்துவிட்டுப் பின்னர் அதிலிருந்து மாறிய ஒருவர் ஐநாவின் தூய்மை குறித்துப் பேசுவதற்கு அருகதை உள்ளவரா?



# இலங்கையால் சர்ச்சைக்குள்ளாகும் பிரிட்டிஷ் அரசியல்வாதிகள்

உபுல் யோசப் பெர்னான்டோ



கடந்த வருடம் ஜனவரி மாதம் பிரித்தானிய முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கைக்கு வந்திருந்தார். ஜனாதிபதி ரணிலுடன் கலந்துரையாடினார். இதையடுத்து, பரபரப்பான கொழும்பு துறைமுக நகரையும் பார்வையிடார்.

இந்தத் துறைமுக நகரத்திற்கு வருகை தந்த ஒரே சீனரல்லாத சர்வதேசத் தலைவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதைத் தொடர்ந்து, துபாயில் கொழும்பின் துறைமுக நகரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இரண்டு முதலீட்டு மன்றங்களில் அவர் பங்கேற்றார். இந்த நிகழ்வில் இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் திலும் அமுனுகமவும் கலந்து கொண்டார். இந்த சந்தர்ப்பத்தில் கெமரூனுக்கு சீனாதான் அழைப்பை விடுத்திருந்தது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

எனினும் கேமரூன் இந்தக் கூட்டங்களில் பங்கேற்றதற்காக கணிசமான கொடுப்பனவைப் பெற்றார் என்று இலங்கை ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

துறைமுக நகரத்தை ஊக்குவிப்பதில் கமரூனின் ஈடுபாடு, முக்கிய ஊடகங்களிடமிருந்து மட்டுமின்றி, பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் கணிசமான விமர்சனங்களை எதிர் கொண்டது. எவ்வாறாயினும், கமரூனின்செய்தித்தொடர்பாளர், இந்த நிகழ்வுகளில் அவர் பங்கேற்றது இலங்கைக்கு உதவவேண்டும் என்ற விருப்பத்தால் உந்தப்பட்டு மட்டுமே என்றும், சீனாவுடனோ அல்லது துறைமுக நகரத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுடனோ அவருக்கு நேரடித் தொடர்பு இல்லை என்றும் வாதிடுகிறார்.

கன்சர்வேடிவ் கட்சியின் முன்னாள் தலைவர் இயன் டங்கன்ஸ்மித், போர்ட்சிட்டிவிளம்பரத்தில் கேமரூனின் ஈடுபாடு குறித்த காரசாரமாக விமர்சித்தார். சீனாவின் பெல்ட் அண்ட் ரோட்" என்பது உதவி மற்றும் ஆதரவு மற்றும் அபிவிருத்திக்கானது அல்ல, அது இறுதியில் கட்டுப்பாட்டை அடைவதற்கானது என்பதை அனைத்து மக்களும் கேமரூன் உணரவேண்டும் -சீனர்கள் ஏற்கனவே இலங்கையில் அதனை நிரூபித்துள்ளனர். இது குறித்து கமரூன் எடுத்த நிலைப்பாட்டை அவர் மறுபரிசீலனை செய்வார் என்று நான் நம்புகிறேன். என்றார்.

சீனாவால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளுக்கு உட்பட்ட மற்றொரு கன்சர்வேடிவ் நாடாளுமன்ற உறுப்பினர் டிம் லௌட்டனும் இதே பாணியில் கேமரூனை விமர்சித்தார். வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் சீனா எவ்வாறு செல்வாக்கு வாங்குகிறது, பின்னர் அந்த நாடுகளுக்கு பணம் செலுத்த முடியாதபோது அதனைக் கட்டுப்படுத்துகின்றது என்பதற்கு இலங்கைத் திட்டம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. கேமரூன் பாதிக்கப்படக்கூடிய நாடுகளை இன்னும் இறுக்கமாக இணைக்காமல், சீனச் செல் வாக்கு மற்றும் கடனில் இருந்து விடுபட உதவவேண்டும் என்றார்.

இந்த விமர்சனங்களுக்கெல்லாம் பதிலளித்த கேமரூனின் செய்தித் தொடர்பாளர், கேமரூனுக்கான அழைப்பு வாஷிங்டனைத் தளமாகக் கொண்ட ஒரு நிறுவனமான வாஷிங்டன் ஸ்பீக்கர்ஸ் பணியகத்தின் மூலம் வந்ததாக ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

டேவிட் கமரூனைப் போலவே, ஒரு காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு ஆதரவைப் பெற முயற்சித்த லியாம் ஃபாக்ஸ், விமர்சனங்களை எதிர்கொண்டார். பாதுகாப்புச் செயலாளர் பதவியிலிருந்தும் விலகவேண்டிய நெருக்கடியை எதிர்கொண்டார். அவர் இலங்கைக்கு பல முறை வந்திருந்தார், இவற்றில் மூன்று பயணங்களுக்கான செலவுகளை இலங்கை ஆட்சியாளர்களும், எஞ்சிய இரண்டு பயணங்களை ஸ்ரீலங்கா டெவலப்மெண்ட் டிரஸ்டும் ஏற்றுக்கொண்டன.



அவரை நாட்டிற்கு அழைத்துவந்தஇலங்கை ஆட்சியாளர்களின் நோக்கம், போரின்போது பிரித்தானிய ஆட்சியாளர்களைத்தமக்குசாதகமான நிலைப் பாட்டை எடுக்க வைப்பதாகும். அவரதுஆலோசகர்என்று கூறிக் கொண்ட ஆடம் வெரிட்டி, ஃபாக்ஸின் பயணங்களை ஒருங்கிணைத்ததால், இந்தப் பயணங்களுடனும் இணைக் கப்பட்டார், இதற்கான முழு அனுசரணையும் இலங்கையால்வழங்கப்பட்டது.

ஃபாக்ஸைப் போலவே கேமரூனும் பிரிட்டனில் கணிசமான விமர்சனங்களை எதிர்கொண்டார். மேலும், ஃபாக்ஸ் மற்றும் கேமரூன் இருவரும் இலங்கையை பூர்வீகமாகக்கொண்டபிரித்தானிய அரசியல்வாதியான நிர்ஜ் தேவ ஆதித்யாவால் இலங்கை ஆட்சியாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியவர்கள். தேவ ஆதித்ய மஹிந்தவின் உத்தியோகபூர்வமற்ற ஆலோசகராக ஒரு காலத்தில் கடமையாற்றினார், அதன் பின்னர் ரணிலால் உத்தியோகபூர்வ ஆலோசகராக நிய மிக்கப்பட்டார்.

ரணிலின் பிரிட்டன் பயணத்தின்போது கமரூன் - ரணில் சந்திப்பைஏற்பாடுசெய்ததில்ஆதித்தாயவுக்கும்பங்கு உண்டு. இதன் விளைவாக, கமரூன் தேவ ஆதித்யாவுடனான தொடர்பு காரணமாக சர்ச்சையை எதிர்கொண்ட மிக சமீபத்திய பிரிட்டிஷ் அரசியல்வாதி ஆகியிருக்கிறார்.

காலைக்கதிர் Kalaikkathir



# தமிழர்களின் நிலங்கள் பறிக்கப்பட்டு இனச்சுத்திகரிப்பு நாட்டில் நடக்கிறது

## சிறிதரன் எம்.பி. திருமலையில் முழக்கம்

கடந்த 1882 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழர்களது இருப்பு விகிதா சாரம் மற்றும் நிலங்கள் பறிக்கப்பட்டு தற்போது வரை இனச்சுத்திகரிப்பு நடைபெற்று வருகின்றது என நாடா ளுமன்ற உறுப்பினர்சிறீதரன்தெரிவித்துள்ளார். தமிழரசுக்கட்சியின்திருகோணமலை மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

திருகோணமலை மாவட்டத்தில் அரசாங்கம் மற்றும் பல்துறைசார்ந்த நிறுவனங்களால் அத்துமீறிய காணி அபகரிப்புகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்மக்களின்அடிப்படையான அவர்களின் நிலத்தைப் பறித்தல் என்பது அவர்களை வாழவிடாமல் அகற்றுவதற்கான முயற்சி. அந்த முன்னெடுப்புகளில் ஒன்றுதான் காணி அபகரிப்பு மற்றும் தமிழர்கள் பூர்வீகமாகக் கொண்ட காணிகளில் விகாரைகளை அமைத்தல் என்பனவாகும். இவைதொடர்பாகநாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாக தாம் கருத்து வெளியிட்டு வருவதாகவும், மேலும் திட்டமிட்டஅபகரிப்புக்கள்தொடர்பிலான பட்டியல் ஒன்றை நாம் தயாரித்து வருகின்றோம். - இவ்வாறு சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் திருகோணமலை மாவட்டக் கிளையின் தலைவர் குகதாசன் மற்றும் செயலாளர் சுரேஸ் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# யாழ். இசைக் கருவியை வடிவமைக்க யாழ்ப்பாணத்தில் ஆட்கள் உள்ளனரா?

## வினவிய நிர்மலா சீதாராமன்

யாழ். இசைக்கருவியை வடிவமைப்பதற்கு ஆள்கள் இருக்கின்றார்களா? என இந்தியநிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கேள்வி எழுப்பினார். மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தியாவின் நிதியமைச்சர் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இந்த விஜயத்தின்போது யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு வருகைதந்து நூலகத்தைப் பார்வையிட்டார். இதன்போது, நூலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த யாழ் இசைக்கருவியை பார்வையிட்டதுடன், இக் கருவியை இசைக்க முடியுமா எனவும் இதனை வடிவமைப்பதற்கு ஆள்கள் இருக்கிறார்களா? எனவும் யாழை இசைப்பதற்கு ஆட்கள் இருக்கின்றார்களா? இசைக்கக்கூடியதாக உள்ளதா? எனவும் ஆர்வமாகக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு யாழ்.மாநகர சபை ஆணையாளர் 'ஆம்' என பதிலளித்ததுடன் அண்மைக்காலத்தில் தான் இத்தகைய யாழை ஒருவர் வடிவமைத்து காண்பித்திருந்தார் என்று கூறினார்.

இந்தியநிதியமைச்சர்யாழை இசைக்கருவியைப் பற்றி கேட்டறிந்தது பலரையும் வியப்பில் ஆழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (05)

# இந்தியா மலையகத்துக்கு வழங்கிய நிதி குறித்து ஆராய விசேட குழு

மலையக மக்களுக்கு காணி உரிமை வழங்குவதற்காக பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவைக் குழு, பாதீட்டுக்கு முன்னர் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார். அத்துடன், கல்வி, சுகாதாரம் உட்பட மலையக மேம்பாடுகள் தொடர்பிலும் பிரதமர் தலைமையிலான குழு கவனம் செலுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன எனவும் பிரதமர் தலைமையில் அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலையில் இந்திய அரசாங்கத்தால் மலையக மேம்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ள 3 ஆயிரம் மில்லியனில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் பற்றி ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ஜீவன் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார்.(05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Swebpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# போலந்திலிருந்து இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை






போலந்தில் இருந்து இலங்கைக்கு சுற்றுலா பயணிகள் வெள்ளிக்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

சுமார் 186 போலந்து நாட்டு சுற்றுலாப் பயணிகள் இவ்வாறு இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தச் சுற்றுலாப் பயணிகள் வெள்ளி காலை 07.45 மணியளவில் போலந்து வார்சாவில் இருந்து ஈ.என்.ரி.1561 விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு ஆண்டு இறுதியில் குளிர்க் காலங்களில் போலந்து நாட்டு பிரஜைகள் 13 ஆவது முறையாக இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

நவம்பர் மாதம் 2023 முதல் மார்ச் மாதம் 2024 வரையான காலப்பகுதிகளில் போலந்து நாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இவர்கள் இலங்கையில் அனுராதபுரம், பொலன்னறுவை, சிகிரியா, மற்றும் பூங்காக்கள் போன்ற வரலாற்று சுற்றுலாத்தலங்களைக் கண்டுகளிக்கவுள்ளனர். (05)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் 16 வயது மாணவி பரிதாபச் சாவு

மோட்டார் சைக்கிள் விபத்தில் 16 வயதான பாடசாலை மாணவியொருவர் உயிரிழந்த சம்பவம் மாவத்தகம பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த மாணவி தனது தந்தையுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ள நிலையில், எதிர்பாராத விதமாக மோட்டார் சைக்கிள் வீதியில் சறுக்கி எதிர்திசையில் வந்த பஸ்ஸுடன் மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் படுகாயமடைந்த மாணவியும் அவரது தந்தையும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மாணவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் உயிரிழந்தவர் கஹபத்வல பிரதேசத்தை சேர்ந்தவர் எனத் தெரிய வந்துள்ளது. (05)

## ரஃபா எல்லை வழியாக இலங்கையர் வெளியேற்றம்

காஸாவிலிருந்து 11 இலங்கையர்கள் ரஃபா எல்லை வழியாக வெளியேறி தற்போது எகிப்தில் தங்கியுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டினர் மற்றும் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறுவதற்காக ரஃபா எல்லையின் இரண்டாவது நாளாகத் தொடர்ந்து திறக்கப்பட்டதை அடுத்து அவர்கள் காஸாவை விட்டு வெளியேறியுள்ளனர். ஆரம்பத்தில் 17 இலங்கையர்கள் காஸாவை விட்டு வெளியேற அதிகாரிகள் அனுமதி வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், 11 இலங்கையர்கள் மாத்திரமே ரஃபா எல்லையைப் பயன்படுத்தி எகிப்துக்குள் செல்ல முடிந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்



காலைக்கதிர்
Kalaikkathir

## பலஸ்தீனம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூகநீதிக்கான வெகுஜன அமைப்பு





ஏற்பாடு செய்திருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ''சுதந்திர பலஸ்தீனத்தை அழிக்காதே, அமெரிக்க, இஸ்ரேல் போர் - ஆக்கிரமிப்பு யுத்தம் வேண்டாம், பலஸ்தீன குழந்தை களை கொல்ல வேண்டாம், போரால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு மருத்துப்பொருட்களை உடன் அனுப்பு, அமெரிக்க ஆயுத வியாபாரிகளுக்கு பலஸ்தீன குழந்தை கள்தான் பரிசோதனைக் களமா?'' என எழுத்தப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங் களையும் எழுப்பினர்.

இலங்கையில் தமிழ் மக்க ளுக்கு எதிராக இடம் பெற்ற இனவழிப்புப் போர் போன்று பலஸ்தீனத்தில் அரபு மக்க ளுக்கு எதிராக இஸ்ரேல் இனவ ழிப்பு போரை மேற்கொண்டுள்ளது. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அமரிக்கா தனது ஆயுதப் பரிசோதனைக் களமாக இந்தப் போரைப் பயன்படுத்தக்கூடாது. இந்தப் போரை உடன் நிறுத்த உலக நாடுகளும், ஐ.நாவும் கவனம் செலுத்த வேண்டும் என

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இதன்போது தெரிவித்தனர்.

இதில் சமூகநீதிக்கான வெகுஜன அமைப்பின் பிரதிநிதிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் பல்வேறு சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(100)

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com







JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
134, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# 58 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவ உதவிகள் பங்களாதேஷிடமிருந்து

## விரைவில் கிடைக்கும் என்கிறது சுகாதார அமைச்சு

பங்களாதேஷிடம் இருந்து 58 ஆயிரம் அமெரிக்க டொலர் மதிப்புள்ள மருந்துகள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரனமற்றும்இலங்கைக்கானபங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரீக் எம்.டி அரிஃபுல் இஸ்லாமுடனான சந்திப்பின் போது இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்துஇலங்கைக்கானபங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தெரிவிக்கையில் -

இந்த மருத்துவ உதவியில் சுமார் 54 வகையான மருந்துகள் வழங்கப்படவுள்ளன. மேலும் புற்றுநோய் மற்றும் சிறுநீரகநோய் சிகிச்சைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும். இதனைத்; தொடர்ந்து பங்களாதேஷ் சுகாதார அமைச்சு சார்பில் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள மருந்துகள் வழங்கப்பட எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்தார்.

குறித்த மருத்துவ உதவிகளுக்காக இலங்கைக்கான பங்களாதேஷ் உயர் ஸ்தானிகரிடம் சுகாதார அமைச்சர் தனது நன்றிகளைத் தெரிவித்தார். (05)

# வடக்குவாழ் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் சீனாவால் கேள்விக்குறி

## அன்னலிங்கம் அன்னராசா விசனம்

இலங்கையின் வடக்கு மாகாணத்தினுடைய கடல் வளங்கள் மற்றும் வாழ்வாதாரங்களை சீனாவிற்கு விற்பனை செய்யப்படுவதாகவும் இதனால் தாம் கடற்றொழிலில் சுதந்திரமாக ஈடுபட முடியாது உள்ளதாகவும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுசமாசங்களின் முன்னாள் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா விசனம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில்வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டுகருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எங்களுடையவளங்களும், வாழ்வாதாரங்களும், சீன நாட்டுக்குவிற்கப்பட்டுசீனஅரசாங்கம் எங்களுடைய இருப்பையே கேள்விக்குறியாக்குகின்ற நிலையில் இருப்பதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதனால் வடக்கு, கிழக்கு கடலிலே நாங்கள் சுதந்திரமாக கடற்றொழிலில் ஈடுபட்டு எங்களுடையவாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாத நிலைக்குதள்ளப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (05)




# ஹமாசினால் பணயக் கைதியாக பிடிக்கப்பட்ட இலங்கையர் சாவு

## இஸ்ரேல் தூதரகம் அறிவிப்பு

ஹமாசால் பணயக்கைதியாக பிடிக்கப்பட்ட இலங்கையர் உயிரிழுந்துள்ளார் என இஸ்ரேலிற்கான இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையை சுஜித் பண்டார யட்டவர உயிரிழுந்துள்ளதை இஸ்ரேல் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தங்களின் இன்டர்போல் பிரிவினரே இதனை உறுதிசெய்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சுஜித்பண்டார யட்டவரவின் பிள்ளைகளின் மரபணுவை எடுத்து பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் இந்த முடிவிற்கு வந்துள்ளதாகத் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் தாக்குதலை மேற்கொண்டவேளை இலங்கையர் ஒருவர் காணாமல்போயிருந்தார் அதனைத் தொடர்ந்து அடையாளம் காணப்படாத உடல் ஒன்றை சுஜித் பண்டாரவின் பிள்ளைகளின் மரபணுவுடன் ஒப்பிட்டு சோதனை செய்தவேளை அது இலங்கையரினது உடல் என்பது உறுதியானது.

வென்னப்புவை சேர்ந்த யட்டவர 2015 இல் வேலைவாய்ப்பிற்காக இஸ்ரேல் சென்றிருந்தார். (05)

# ரயில்வே பொது முகாமையாளராக பண்டார கடமைகளை ஏந்றார்



அமைச்சர் பந்துல குணவர்தனவின் கோரிக்கைக்கு அமைய ரயில்வே பொது முகாமையாளராக பொறியியலாளர் எச்.எம்.கே.டபிள்யூ. பண்டார நியமிக்கப்பட்டதையடுத்து வெள்ளிக்கிழமை காலை அவர் தனது கடமைகளைப் பொறுப்பெடுத்தார்.

இவர் நுகவெல மத்திய மகா வித்தியாலயம் மற்றும் மாத்தளை வித்தியாலயத்தில் கல்வி கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டமும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றவர் ஆவார்.

இவர்1996ஆம்ஆண்டுஇலங்கை ரயில்வே திணைக்களத்தில் உதவி மாவட்ட பொறியியலாளராக இணைந்து, மாவட்ட பொறியியலாளராக, பிரதி பிரதம பொறியியலாளராக,பிரதமபொறியியலாளராகமற்றும்மேலதிகபொதுமுகாமையாளராக பணியாற்றி 27 வருட பொறியியல் துறையில் அனுபவம் வாய்ந்தவர் ஆவார். (05)

# சுற்றுலாப் பயணிகளினால் சேதமாகும் சிகிரிய சுவர்கள்

இலங்கையின் சுற்றுலாத்தலங்களில் ஒன்றான சீகிரியாவை பார்வையிட வரும் சுற்றுலாப்பயணிகள் படிகளால் அமைக்கப்பட்ட பாதையின் ஊடாக செல்வதால் அங்குள்ள பழைமையான சுவர்களில் 70 சதவீதமானவை சேதமடைந்துள்ளன என மத்திய கலாசார நிதியம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இது தொடர்பானஅறிவுறுத்தல் பலகைகள் அங்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் பல சுற்றுலாப் பயணிகள் அவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி ரணசிங்க தெரிவித்துள்ளார்.

சிகிரியாவில்அமைக்கப்பட்டுள்ள புராதன செங்கல் சுவர்களை புனரமைப்புச் செய்வதற்காக வருடாந்தம் மில்லியன் கணக்கான ரூபா செலவிடப்படுவதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# சீனியின் விலை உடன் எகிறல்!

சீனிக்கான அதிகபட்ச சில்லறை விலை வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் வெள்ளைச் சீனி - (பொதி செய்யப்படாதது) ஒரு கிலோ 275 ரூபாவாகவும் பொதி செய்யப்பட்ட ஒரு கிலோ சீனியின் விலை 295 ரூபாவாகவும் பிரவுண் சீனி பொதி செய்யப்படாதது 330 ரூபாவாகவும் பொதி செய்யப்பட்டது கிலோ 350 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.(05)



# அழைப்பிதழை எதிர்பார்த்து மனோ இருக்கக் கூடாதாம்

## சமாளிக்கிறார் ஜீவன்

நாம் 200 நிகழ்வுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுக்கு அழைப்பு விடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்; பொதுச்செயலாளரும்,நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். பெரும்பான்மை இனத்தை சேர்ந்த எதிரணி அரசியல் தலைவர்கள் கூட நிகழ்வுக்கு வருகை தந்திருந்த நிலையில் என் சமூகத்தைச் சார்ந்த அரசியல் தலைவர்கள் வராமை கவலையளிக்கின்றது என்றும்விசனம்தெரிவித்துள்ளார்.

எமது சமூகத்துக்கான நிகழ்விற்கான அழைப்பிதழை எதிர்பார்க்கக்கூடாது இருந்தாலும் அழைப்பிதழ் அனுப்பியுள்ளோம் என மனோ கணேசனிடம் கூறியிருந்தாகவும்ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார். (05)

# இலங்கையுடன் நேரடி விமான சேவை ஆரம்பித்துள்ளது சுவிற்ஸர்லாந்து

சுவிற்ஸர்லாந்து-இலங்கைக்கான நேரடி விமான சேவையை ஆரம்பித்துள்ளதாக இலங்கை விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

எடெல்வீஸ் ஏர்லைன்ஸ் இந்த சேவைகளை முன்னெடுத்துள்ளது.

வெள்ளிக்கிழமை காலை 221 பயணிகளுடன்முதலாவதுநேரடிவிமானம்பண்டாரநாயக்கசர்வதேசவிமான நிலையத்தில் தரையிறங்கியது.(05)

# மதிலையும் உடைத்து வாகனத்தில் மோதிய கல்குடா பொலிஸ் ஜீப்

கல்குடா பொலிஸ் நிலைய ஜீப் வெள்ளிக்கிழமை விபத்துக்குள்ளாகியுள்ளது.

கல்குடாபொலிஸ்நிலையத்திலிருந்து வாழைச்சேனை நோக்கி வேகமாக பயணம் செய்த ஜீப்பே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

வாழைச்சேனை துறைமுகத்துக்குமுன்னாலுள்ளவீட்டுமதிலைஉடைத்துக்கொண்டுவளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தவான் ஒன்றில் மோதியுள்ளது. இவ் விபத்தில் மதில், ஜீப், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஆகியவை சேதமடைந்துள்ளன.

இவ் விபத்தில் ஜீப்பைச் செலுத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் காயங்களுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



# மோட்டார் சைக்கிள் திருட்டில் ஈடுபட்டவர் குடாநாட்டில் கைது

யாழில் மோட்டார் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட நபரைப் பொலிஸார் வெள்ளிக்கிழமைகைதுசெய்துள்ளனர். கிளிநொச்சியைச் சேர்ந்த குறித்த நபர் கடந்த 29 ஆம் திகதி மோட்டார் சைக்கிளைத் திருடியுள்ளார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து திருடப்பட்ட மோட்டார் சைக்கிளின் உதிரிப்பாகங்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.11.2023இல் வெளியிடப்பெற்றது.